**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்**

**முன்னிலை: திரு.ச.கபாலீஸ்வரன், பி.ஏ.,பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஒட்டன்சத்திரம்**

**2023-ம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ஆம் தேதி வியாழக்கிழமை**

**அ.வ.எண்.2/2022**

1. செல்லம்மாள்
2. சதாசிவம் ...... வாதிகள்

**- எதிரிடை -**

1. திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
2. ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் அவர்கள். ....... பிரதிவாதிகள்

இந்த வழக்கானது என் முன்பாக கடந்த 09.01.2023-ஆம் தேதி இறுதி விசாரணைக்காக வந்தபோது, வாதிகள் தரப்பில், கற்றறிந்த வழக்கறிஞர் திரு.Kராமராஜ் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில், கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.Kமுருகானந்தம் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், நாளது தேதி வரை இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று வழங்கும்...

## தீர்ப்புரை

1. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், வெறியப்பூர் கிராமத்தில் வசிக்கும், 1-ஆம் வாதியின் இளைய மகனும், 2-ஆம் வாதியின் சகோதரருமான பரமசிவம் என்பவர் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக காணவில்லை என்பதால் அவர் உரிமையியல் இறப்பு அடைந்துவிட்டதாக விளம்புகை செய்யக் கோரியும், 2-ஆம் பிரதிவாதியின் அலுவலகத்தில் உள்ள இறப்புப் பதிவேட்டில் அவர் இறந்துவிட்டதாக பதிவு செய்ய செயலுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும், இறந்துபோன 2-ஆம் வாதியின் தகப்பனாரும், 1-ஆம் வாதியின் கணவருமான பழனிச்சாமிக்கு வாதிகள் மட்டுமே வாரிசு என்று விளம்புகை செய்யக் கோரியும், இதர பரிகாரங்கள் கோரியும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்** : 1-ஆம் வாதிக்கும், இறந்துபோன பழனிச்சாமி என்பருக்கும் கடந்த 1967-ஆம் ஆண்டு திருமணம் நடந்தது என்றும், மேற்படி திருமண பந்தத்தில் இருவருக்கும் 2-ஆம் வாதி மற்றும்

காணாமல்போன பரமசிவம் ஆகியோர் வாரிசுகள் என்றும், பரமசிவம் கடந்த 04.04.1977-ஆம் தேதி பிறந்தார் என்றும், கடந்த 2009-ஆம் ஆண்டு மகாராஷ்டிரா மாநிலம் தானேவிற்கு விற்பனையாளர் வேலைக்காக சென்றிருந்தார் என்றும், கடந்த 09.01.2009-ஆம் தேதி காலை 8.30 மணிக்கு வேலைக்கு சென்றவர் வீடு திரும்பவில்லை என்பதால் அவரது நண்பரான அன்பழகன் மூலமாக கடந்த 10.01.2009-ஆம் தேதி கொலுசிவாடி காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது என்றும், பரசிவத்தை வாதிகளும் அவர்களது உறவினர்களும் பல இடங்களில் தேடிப் பார்த்தார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

3. ஆனால் அவரை கண்டு பிடிக்க முடியவில்லை என்பதால் பரமசிவத்தை இறந்துவிட்டதாக அறிவிக்கக் கோரியும், 2-ஆம் பிரதிவாதியின் அலுவலகத்தில் உள்ள இறப்பு பதிவேட்டில் அதனை பதிவு செய்து கொள்ள உத்தரவிடக் கோரியும், 2-ஆம் வாதியின் தகப்பனார் பழனிச்சாமி கடந்த 12.05.2017-ஆம் தேதி இறந்துவிட்டார் என்றும், மேற்படி இறந்துபோன பழனிச்சாமிக்கு வாதிகள் மட்டுமே வாரிசுகள் என்று வாரிசு சான்று கோரி 2-ஆம் வாதி, 2-ஆம் பிரதிவாதியிடம் மனு செய்ததில், பரமசிவம் காணாமல் போனதால் உரிய நீதிமன்றத்தை அணுகி வாரிசு சான்று பெற்றுக் கொள்ளும்படி கடந்த 17.12.2021-ஆம் தேதி 2-ஆம் பிரதிவாதி குறிப்பாணை வழங்கி உள்ளார் என்றும், எனவே, இறந்துபோன பழனிச்சாமியின் பெயரில் உள்ள சொத்துக்களை பெயர் மாற்றம் செய்வதற்கு வாதிகள் மட்டுமே இறந்துபோன பழனிச்சாமிக்கு வாரிசுகள் என்று விளம்புகை செய்யக் கோரியும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

4. **பிரதிவாதிகள் தரப்பு எதிர் வழக்குரையின் சுருக்கம்**: 1-ஆம் வாதியின் மகன் பரமசிவம் கடந்த 09.01.2009-ஆம் தேதியன்று மகாராஷ்ரா மாநிலத்திற்கு வேலைக்காக சென்றவர் காணாமல் போய்விட்டார் என்றும், காணாமல் போனது குறித்து அங்குள்ள காவல் நிலையத்தில் புகார் செய்தும், மேற்படி புகாரின் பேரில் அவரை கண்டு பிடிக்க முடியவில்லை என்பதும் 2-ஆம் பிரதிவாதியின் உதவியாளர் மூலமாக விசாரணையில் தெரிய வருகிறது என்றும். 1-ஆம் வாதி தனது மகனை தேடி கண்டுபிடிக்க முயற்சி செய்த சொல்லியிருப்பது வழக்கிற்காக சொல்லப்பட்ட விசயம் என்றும், மேலும், காணாமல் போன பரமசிவத்தின் பெயரில் என்ன சொத்து உள்ளது என்பதையும், இறந்துபோன பழனிச்சாமிக்கு வாதிகளை தவிர வேறு வாரிசுகள் உள்ளனரா என்பது குறித்தும்

தெளிவாக விளக்கம் அளிக்கப்படவில்லை என்றும், மேற்படி சங்கதிகளை நிரூபிக்கும் பொறுப்பு வாதிகளுக்கு உள்ளது என்றும், எனவே, பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

5. **வழக்குரை, எதிர் வழக்குரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலினை செய்தும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன** :

i) கடந்த 09.01.2009-ஆம் தேதி காணாமல் போன பரமசிவம் என்பவர் உரிமையியல் இறப்பு அடைந்துவிட்டதாக விளம்புகை செய்ய கோரும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?

ii) பரமசிவம் என்பவரின் உரிமையியல் இறப்பை 2-ஆம் பிரதிவாதியின் அலுவலக இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய கோரும் செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்க கூடியதா?

iii) கடந்த 12.05.2017-ஆம் தேதி இறந்துபோன பழனிச்சாமி வாதிகள் மட்டுமே வாரிசுகள் என்று கோரும் விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்க கூடியதா?

iv) வாதிகளுக்கு, பிரதிவாதிகள் வழக்கு செலவுத் தொகையை செலுத்திட கோரும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்க கூடியதா?

v) வாதிகளுக்கு கிடைக்க கூடிய வேறு பரிகாரங்கள் என்ன?

6. வாதிகள் தரப்பில், 2-ஆம் வாதி சதாசிவம் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. கூடுதல் சாட்சியாக இளங்கோ என்பவர் வா.சா.ஆ.2-ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மற்றொரு கூடுதல் சாட்சியாக செல்வராஜ் என்பவர் வா.சா.ஆ.3-ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அத்துடன் வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் வெரியப்பூர் கிராம நிர்வாக அலுவலர் தமிழ்செல்வி என்பவர் பி.வா.சா.1-ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு சாட்சியமும் முடிக்கப்பட்டு, இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் அனைத்தும் கவனமாக பரிசீலினை செய்யப்பட்டன.

7. வாதி தரப்பில், 2-ஆம் வாதியின் சகோதரரான பரமசிவம் மகாராஷ்டிரா மாநிலம் தானேவிற்கு வேலைக்கு சென்றிருந்தார் என்றும், அங்கு அவர் காணாமல்

போய்விட்டதாக தகவல் அறிந்து நண்பர் அன்பழகன் என்பவர் மூலமாக கொலுசிவாடி காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது என்றும், வாதிகளும் பல இடங்களில் தேடிப் பார்த்தார்கள் என்றும், ஆனால், கடந்த 10 வருடங்களுக்கு மேலாக மேற்படி பரமசிவத்தை கண்டுபிடிக்க முடியவில்லை என்றும், எனவே, அவர் உரிமையியல் இறப்பு அடைந்துவிட்டதாக விளம்புகை செய்ய வேண்டும் என்றும், கடந்த 12.05.2017-ஆம் தேதி இறந்துபோன பழனிச்சாமிக்கு வாதிகள் மட்டுமே வாரிசுகள் என்று விளம்புகை செய்ய வேண்டும் என்றும், மேற்படி பரமசிவத்தின் உரிமையியல் இறப்பை 2-ஆம் பிரதிவாதி அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள உத்தரவிட வேண்டும் என்று LIC of India vs. Anuradha என்ற வழக்கை மேற்கோள் காட்டி வாதிடப்பட்டது.

8. பிரதிவாதிகள் தரப்பில், வாதிகள் காணாமல்போன பரமசிவத்தை கண்டுபிடிக்க முயற்சி செய்ததாக சொல்வது உண்மையல்ல என்றும், மேற்படி பரமசிவத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்ன உள்ளது என்பதைப் பற்றி எவ்வித விவரங்களும் இல்லை என்றும், காணாமல்போன பரமசிவத்திற்கு திருமணம் ஆகியுள்ளதா? இல்லையா? என்பது குறித்தும், அவருக்கு வேறு வாரிசுகள் உள்ளார்களா என்பது குறித்தும் எவ்வித விளக்கமும் இல்லை என்றும், வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை வைத்து மட்டும் வாதிகள் கோரும் பரிகாரங்களை வழங்க இயலாது என்றும், எனவே, வழக்கை பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

9. **எழுவினா எண்.1-க்கான தீர்வு** : ஒட்டன்சத்திரம் வட்டம், வெறியப்பூர் கிராமத்தில் வசிக்கும், 1-ஆம் வாதியின் இளைய மகனும், 2-ஆம் வாதியின் சகோதரருமான பரமசிவம் என்பவர் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக காணவில்லை என்பதால், அவர் உரிமையியல் இறப்பு அடைந்துவிட்டதாக விளம்புகை செய்யக் கோரியும், 2-ஆம் பிரதிவாதியின் அலுவலகத்தில் உள்ள இறப்புப் பதிவேட்டில் மேற்படி உரிமையியல் இறப்பை பதிவு செய்ய செயலுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும், 2-ஆம் வாதியின் தகப்பனாரான இறந்துபோன பழனிச்சாமிக்கு வாதிகள் மட்டுமே வாரிசு என்று விளம்புகை செய்யக் கோரியும், வாதிகளால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

10. இந்த வழக்கில் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பாக காணாமல் போனதாக கூறப்படும் பரமசிவம் என்பவரை உரிமையியல் இறப்பு அடைந்துவிட்டார்

என்று விளம்புகை செய்யக் கோரியுள்ள பரிகாரத்தை பொறுத்தவரை இந்திய சாட்சிய சட்டப் பிரிவு 108-ஆனது, **ஒரு மனிதர் உயிருடன் உள்ளாரா, இல்லையா என்ற கேள்வி எழும்போது, அந்த நபர் உயிருடன் இருந்திருந்தால் அவரைப் பற்றி இயல்பாக கேள்விப்பட்டிருக்க வேண்டியவர்கள் ஏழாண்டு காலத்திற்கு அவரைப் பற்றி கேள்விப்படவில்லை என்று மெய்ப்பிக்க வேண்டும் என்றும், மேற்படி காணமால்போன நபர் உயிருடன் உள்ளார் என்று கூறும் தரப்பினரே அதனை நிரூபணம் செய்ய வேண்டிய கடமை உள்ளவர்** என்று கூறுகிறது. எனவே, இந்த வழக்கில் வாதிகள் தரப்பில் மேற்படி காணாமல்போன பரமசிவத்தை பற்றிய தகவல் எதையும் கேள்விப்படவில்லை என்று நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதையும், பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி பரமசிவம் உயிருடன் உள்ளார் என்று எதிர்வாதம் செய்யப்பட்டு இருந்தால் அது நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதையும் இந்த வழக்கில் இருதரப்பிலும் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள சாட்சிய, சான்றாவணங்கள் மூலமாக பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது.

11. இந்த வழக்கில் வாதி தரப்பில், வா.சா.1 தனது சாட்சியத்தில், **நான் காணாமல் போன பரமசிவத்தின் சகோதரர். கடந்த 09.01.2009-ஆம் தேதி மகாராஷ்டிரா மாநிலம் தானேவிற்கு வேலைக்கு சென்றிருந்த எனது தம்பி அங்கு காணாமல் போய்விட்டதாக தகவல் அறிந்து அவரது நண்பர் அன்பழகன் மூலமாக மகாராஷ்டிரா மாநிலம் கொலுசிவாடி காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். நாங்களும் பல இடங்களில் தேடிப் பார்த்தோம். ஆனால் நாளது தேதிவரை அவரை கண்டுபிடிக்க முடியவில்லை. கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக எனது தம்பி பரமசிவத்தைப் பற்றி எந்த தகவலும் இல்லை. கடந்த 12.05.2017-ஆம் தேதி எங்களது தகப்பனார் பழனிச்சாமி இறந்துவிட்டார். எனது தகப்பனாருக்கு வாரிசு சான்று வேண்டி 2-ஆம் பிரதிவாதியிடம் விண்ணப்பித்தேன். எனது சகோதரர் காணாமல் போய்விட்டதால் வாரிசு சான்று வழங்க 2-ஆம் பிரதிவாதி மறுத்துவிட்டார்** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

12. மேற்படி சாட்சியத்தை உறுதிப்படுத்த, வாதிகள் தரப்பில் கடந்த 25.05.2017-ஆம் தேதிய பழனிச்சாமி என்பவரின் இறப்புச் சான்றிதழ் வா.சா.ஆ.1 ஆகவும், 1, 2 வாதிகளின் குடும்ப அட்டை வா.சா.ஆ.2 ஆகவும், 2-ஆம் வாதியின் ஆதார் அட்டை வா.சா.ஆ.3 ஆகவும், 1-ஆம் வாதியின் ஆதார் அட்டை வா.சா.ஆ.4 ஆகவும், கடந்த 17.12.2021-ஆம் தேதிய வட்டாட்சியர் வழங்கிய குறிப்பாணை வா.சா.ஆ.5

ஆகவும், கடந்த 28.05.1986-ஆம் தேதிய காணாமல்போன பரமசிவத்தின் பள்ளி மாற்றுச் சான்றிதழ் வா.சா.ஆ.6 ஆகவும், கடந்த 11.01.2009-ஆம் தேதிய காவல் துறையினரின் விசாரணை அறிக்கை வா.சா.ஆ.7 ஆகவும், கடந்த 14.11.2008-ஆம் தேதிய விசாரணை அறிக்கையின் தமிழ் மொழி பெயர்ப்பு அறிக்கை வா.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

13. வா.சா.ஆ.1-ஆன இறப்புச் சான்றிதழை கவனமாக பரிசீலனை செய்ததில், வா.சா.1-ன் தகப்பனார் பழனிச்சாமி கடந்த 12.05.2017-ஆம் தேதி இறந்துபோயுள்ளார் என்பதையும், வா.சா.ஆ.2-ஆன குடும்ப அட்டை மூலமாக காணாமல்போன பரமசிவத்தின் தாயார் இந்த வழக்கின் 1-ஆம் வாதி செல்லம்மாள் என்பதையும், தகப்பனார் இறந்துபோன பழனிச்சாமி என்பதையும், வா.சா.ஆ.3 ஆன ஆதார் அட்டை மூலமாக 2-ஆம் வாதியின் தகப்பனார் பெயர் பழனிச்சாமி கவுண்டர் என்பதையும், அதேபோல், வா.சா.ஆ.4 ஆன ஆதார் அட்டை மூலமாக 1-ஆம் வாதியின் கணவர் பெயர் பழனிச்சாமி கவுண்டர் என்பதையும், வா.சா.ஆ.5-ஆன குறிப்பாணை மூலமாக 2-ஆம் வாதி, இந்த வழக்கின் 2-ஆம் பிரதிவாதியிடம் காணாமல்போன பரமசிவத்தின் இறப்பை பதிவு செய்து கொள்ளவும், இறந்துபோன பழனிச்சாமியின் சட்டப்படியான வாரிசுகள் என்று வாதிகளுக்கு வாரிசு சான்று வழங்கவும் விண்ணப்பத்துள்ளதையும், மேற்படி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகிறது.

14. மேலும், வா.சா.ஆ.6-ஆன மாற்றுச் சான்றிதழ் மூலம் காணமால் போனதாக சொல்லப்படும் பரமசிவத்தின் தகப்பனார் பழனிச்சாமி கவுண்டர் என்பதையும், பரமசிவம் கடந்த 04.04.1977-ஆம் தேதி பிறந்துள்ளார் என்பதையும், வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 ஆகிய மும்பை தானேவில் காணாமல்போன பரமசிவத்தை கண்டுபிடிக்க தானேவில் உள்ள கொலுசிவாடி காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது என்பதையும், மேற்படி புகார் மனு Human Missing Reg.No.2/2009-ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதையும், மேற்படி புகாரில் காணாமல்போன பரமசிவம் கடந்த 09.01.2009-ஆம் தேதி காலை 8.30 மணிக்கு பணிக்கு சென்றவர் வீடு திரும்பவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பதையும், அறிய முடிகிறது.

15. வாதி தரப்பில், கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்ட வா.சா.2-ஆன இளங்கோ என்பவர் தனது சாட்சியத்தில், **நான் வாதிகளின் ஊரில் வசித்து**

**வருகிறேன். இறந்துபோன பழனிச்சாமி கவுண்டருக்கு, 2-ஆம் வாதியும், காணாமல்போன பரமசிவமும் வாரிசுகள். பழனிச்சாமி கடந்த 12.05.2017-ஆம் தேதி இறந்துவிட்டார். பரமசிவம் மகாராஷ்டிரா மாநிலம், தானேவிற்கு சென்று அங்கு காணாமல் போய்விட்டார். பரமசிவத்திற்கு திருமணம் ஆகவில்லை. பரமசிவம் காணாமல் போனது குறித்து அவரது நண்பர் அன்பழகன் புகார் அளித்துள்ளார். தேடிப் பார்த்தும் பரமசிவத்தை கண்டறிய முடியவில்லை** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

16. மற்றொரு வாதிகள் தரப்பு கூடுதல் சாட்சி வா.சா.3 -ஆன செல்வராஜ் என்பவர் தனது சாட்சியத்தில், **நான் வாதிகளின் ஊரில் வசித்து வருகிறேன். இறந்துபோன பழனிச்சாமி கவுண்டருக்கு 2-ஆம் வாதியும், காணாமல்போன பரமசிவமும் வாரிசுகள். பழனிச்சாமி கடந்த 12.05.2017-ஆம் தேதி இறந்துவிட்டார். பரமசிவம் மகாராஷ்டிரா மாநிலம், தானேவிற்கு சென்று அங்கு காணாமல் போய்விட்டார். பரமசிவத்திற்கு திருமணம் ஆகவில்லை. பரமசிவம் காணாமல் போனது குறித்து அவரது நண்பர் அன்பழகன் புகார் அளித்துள்ளார். தேடிப் பார்த்தும் பரமசிவத்தை கண்டறிய முடியவில்லை** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

17. வா.சா.2 மற்றும் வா.சா.3 ஆகியோர் வா.சா.1-ன் சாட்சியத்தை உறுதிப்படுத்தும் வகையில் சாட்சியம் அளித்துள்ளார்கள். வாதிகள் தரப்பில் குறியீடு செய்துள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்களும் அதனை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட பி.வா.சா.1-ஆன வெரியப்பூர் கிராம நிர்வாக அலுவலர் தமிழ்செல்வி தனது சாட்சியத்தில், **எனது விசாரணையில் காணாமல்போன பரமசிவம் கடந்த 10 ஆண்டுகளாக ஊருக்கு வரவில்லை என்று தெரிந்து கொண்டேன். பரமசிவத்தின் உறவினர்கள் மகாராஷ்டிரா உள்ளிட்ட பல பகுதிகளில் தேடிப் பார்த்தும் அவரை கண்டுபிடிக்க முடியவில்லை என்று எனது விசாரணையில் சொல்லியுள்ளார்கள். பழனிச்சாமிக்கு சொத்துக்கள் உள்ளன. காணாமல்போன பரமசிவத்திற்கு திருமணம் ஆகவில்லை** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

18. வா.சா.1 முதல் வா.சா.3 மற்றும் பி.வா.சா.1 ஆகியோரின் சாட்சிகள் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் ஆகியவற்றின் வாயிலாக பரமசிவம் என்பவர் மகாராஷ்டிரா மாநிலம் தானேயில் வேலைக்கு சென்றபோது காணாமல் போயுள்ளார். அவரை கண்டுபிடிக்க அவரது நண்பர்

அன்பழகன் என்பவர் மகாராஷ்டிரா மாநிலம் கொலுசிவாடி கவால் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். வாதிகள் உள்ளிட்ட உறவினர்கள் தேடிப் பார்த்தும் காணாமல்போன பரமசிவத்தை கண்டுபிடிக்க முடியவில்லை. மேலும், மேற்படி காணாமல்போன பரமசிவம் மற்றும் 2-ஆம் வாதி ஆகியோரின் தகப்பனாருமான பழனிச்சாமி கவுண்டர் கடந்த 12.05.2017-ஆம் தேதி இறந்துள்ளார். மேற்படி பழனிச்சாமிக்கு காணாமல்போன பரமசிவமும், வாதிகளும் மட்டும் வாரிசுகள். காணாமல்போன பரமசிவத்திற்கு திருமணம் ஆகவில்லை என்பதால், 1-ஆம் வாதி மட்டுமே அவரது வாரிசு என்பது நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

19. இந்த வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் காணாமல்போன பரமசிவம் உயிருடன் உள்ளார் என்று எதிர்வாதம் செய்யப்படவில்லை. மாறாக, தங்களது விசாரணையில் கடந்த 09.01.2009-ஆம் தேதி மகாராஷ்டிரா மாநிலத்திற்கு விற்பனையாளர் பணிக்கு சென்ற பரமசிவம் காணாமல் போய்விட்டதாகவும், அது குறித்து புகார் அளிக்கப்பட்டதாகவும், ஆனாலும், கண்டுபிடிக்க இயலவில்லை என்றும் தெரிய வந்ததாக கூறப்பட்டுள்ளது. பி.வா.சா.1-ஐ வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, **எனது விசாரணையில் காணாமல்போன பரமசிவம் கடந்த 10 ஆண்டுகளாக ஊருக்கு வரவில்லை என்று தெரிந்து கொண்டேன். காணாமல்போன பரமசிவத்திற்கு திருமணம் ஆகாததால் அவரது தாயார் மட்டுமே வாரிசு ஆவார்** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

20. வாதிகள் தரப்பில் மேற்கோள் காட்டப்பட்ட LIC of India vs. Anuradha என்ற வழக்கில் If an issue may arise as to the date or time of death the same shall have to be determined on evidence-direct or circumstantial and not by assumption or presumption. The burden of proof would lay on the person who makes assertion of death having taken place at agiven date or time in order to succeed in his claim. Rarely it may be permissible to proceed on premise that the death had occured on any given date before which the period of seven years' absence was shown to have elapsed என்று கூறியுள்ளது. இந்த வழக்கில் கடந்த 09.01.2009-ஆம் தேதி பரமசிவம் காணாமல் போனதாக புகார் அளிக்கப்பட்டுள்ளது. அதனை உறுதி செய்யும் வகையில் வாதிகள் தரப்பு சாட்சியங்களும், வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 ஆகிய ஆவணங்களும் அமைந்துள்ளன.

21. மேற்படி சாட்சிய, சான்றாவணங்களின் அடிப்படையில் பரமசிவம் என்பவர் உயிருடன் இருந்திருந்தால் அவரைப் பற்றி இயல்பாக கேள்விப்பட்டிருக்க வேண்டிய வாதிகள் கடந்த 09.01.2009-ஆம் தேதி முதல் ஏழாண்டு காலத்திற்கும் மேலாக அவரைப் பற்றி கேள்விப்படவில்லை என்பது வாதிகள் தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. வா.சா. 1 முதல் வா.சா.3 வரையிலான சாட்சிகளின் சாட்சியம் நம்பும்படி உள்ளது. எனவே, காணாமல்போன பரமசிவம் உரிமையியல் இறப்பு அடைந்துவிட்டார் என்று விளம்புகை செய்து உத்தரவிடுவது நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்து எழுவினா எண்.1-க்கு தீர்வு காணப்படுகிறது.

22. **எழுவினா எண்.2-க்கான தீர்வு** : எழுவினா எண்.1-க்கான தீர்வு வாதிகளுக்கு ஆதரவாக உள்ளதாலும், இந்த வழக்கில் காணாமல்போன பரமசிவம் உரிமையியல் இறப்பு அடைந்துவிட்டதாக விளம்புகை செய்யப்பட்டுள்ளதாலும், பிறப்பு, இறப்பு பதிவு சட்டத்தில் மேற்படி காணாமல்போன பரமசிவத்தின் இறப்பை பதிவு செய்து கொள்ள வழிவகை இருப்பின், அவ்வாறே வாதிகள் உரிய முறையில் 2-ஆம் பிரதிவாதியின் அலுவலகத்தில் விண்ணப்பித்து, பரிகாரம் தேடிக் கொள்ள வாய்ப்பு உள்ளதாலும், காணாமல்போன பரமசிவத்தின் இறப்பை 2-ஆம் பிரதிவாதியின் அலுவலக இறப்பு பதிவேட்டில் பதிவு செய்யக் கோரும் செயலுத்துக் கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று எழுவினா எண்.2-க்கு தீர்வு காணப்படுகிறது.

23. **எழுவினா எண்.3-க்கான தீர்வு** : இந்த வழக்கில் கடந்த 12.05.2017-ஆம் இறந்துபோன பழனிச்சாமிக்கு வாதிகளும், காணமால்போன பரமசிவமும் வாரிசுகள் என்பதாலும், மேற்படி காணாமல்போன பரமசிவத்திற்கு திருமணம் ஆகாததால் இந்த வழக்கின் 1-ஆம் வாதியான அவரது தாயார் மட்டுமே வாரிசு என்பதாலும், தற்போது மேற்படி காணாமல்போன பரமசிவம் உரிமையியல் இறப்பு அடைந்துவிட்டார் என்று விளம்புகை செய்யப்பட்டுள்ளதாலும், இறந்துபோன பழனிச்சாமிக்கு இந்த வழக்கின் வாதிகள் சட்டப்படியான வாரிசுகள் என்று விளம்புகை செய்து உத்தரவிடுவது நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று முடிவு செய்து எழுவினா எண்.3-க்கு தீர்வு காணப்படுகிறது.

24. **எழுவினா எண்.4-க்கான தீர்வு** : எழுவினா எண்.1 மற்றும் எழுவினா எண்.3 ஆகியவை வாதிகளுக்கு ஆதரவாக உள்ளதாலும், வழக்கின்

தன்மையை கருத்தில் கொண்டு வழக்கு செலவுத் தொகையை தரப்பினர்களே ஏற்க உத்தரவிடப்படுகிறது.

25. **எழுவினா எண்.5-க்கான தீர்வு** : எழுவினா எண்.1 மற்றும் எழுவினா எண்.3 ஆகியவை வாதிகளுக்கு ஆதரவாக உள்ளதாலும், வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டும், வாதிகளுக்கு கிடைக்கக் கூடிய வேறு பரிகாரங்கள் ஏதும் இல்லை என்று எழுவினா எண்.5-க்கு தீர்வு காணப்படுகிறது.

இறுதியாக, இந்த வழக்கு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. காணாமல்போன பரமசிவம் உரிமையியல் இறப்பு அடைந்துவிட்டதாக விளம்புகை செய்தும், இறந்துபோன பழனிச்சாமிக்கு வாதிகள் சட்டப்படியான வாரிசுகள் என்று விளம்புகை செய்தும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023-ஆம் ஆண்டு 19-ஆம் நாள் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SKABALEESWAREN Digitally signed by SKABALEESWAREN Date: 2023.01.19 18:20:07 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

ஒட்டன்சத்திரம்.

**1. வாதிகள் தரப்பு சாட்சிகள்**:

| வ.எண் | பெயர் | விபரம் |
|---|---|---|
| வா.சா.1 | சதாசிவம் | 2-ஆம் வாதி |
| வா.சா.2 | இளங்கோ | வாதிகள் தரப்பு சாட்சி |
| வா.சா.3 | செல்வராஜ் | வாதிகள் தரப்பு சாட்சி |

**2. வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்**:

| **வரிசை** | **தேதி** | **ஆவணங்கள்** | **தன்மை** |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 25.05.2017 | பழனிச்சாமி இறப்புச் சான்றிதழ் | அசல் |
| வா.சா.ஆ.2 | - | 1, 2 வாதிகளின் குடும்ப அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) | நகல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.3 | - | 2-ஆம் வாதியின் ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) | நகல் |
| வா.சா.ஆ.4 | - | 1-ஆம் வாதியின் ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) | நகல் |
| வா.சா.ஆ.5 | 17.12.2021 | வட்டாட்சியர் வழங்கிய குறிப்பாணை | அசல் |
| வா.சா.ஆ.6 | 28.05.1986 | பள்ளி மாற்றுச் சான்றிதழ் | அசல் |
| வா.சா.ஆ.7 | 11.01.2009 | காவல் துறையினரின் விசாரணை அறிக்கை | அசல் |
| வா.சா.ஆ.8 | 14.11.2008 | விசாரணை அறிக்கையின் மொழி பெயர்ப்பு அறிக்கை | உண்மை |

**3. பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்** :

| வ.எண் | பெயர் | விபரம் |
|---|---|---|
| பி.வா.சா.1 | தமிழ்செல்வி (வெரியப்பூர் கிராம நிர்வாக அலுவலர்) | பிரதிவாதிகள் தரப்பு சாட்சி |

**4. பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை.

SKABALEESWAREN Digitally signed by SKABALEESWAREN Date: 2023.01.19 18:20:19 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

ஒட்டன்சத்திரம்.